

செயலாற்றுகை அறிக்கை
2022

தலைப்பு - 102

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
செலவினத் தலைப்பு இலக்கம்: 102

அத்தியாயம் 01 - நிறுவனத்தின் விவரம் .'.நிறைவேற்றுப் பொழிப்புஜுசசழச! டீழழமஅயசம ழெவ னநகனெென.

அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு 8

அத்தியாயம் 03 – 2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை 11

அத்தியாயம் 04 - செயலாற்றுகை சுட்டிகள் 17

அத்தியாயம் 05 - நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (ளுனுபு) அடையும் செயலாற்றுகை 17

அத்தியாயம் 06 - மனித வள விபரம் 19

அத்தியாயம் 07 - இணக்க அறிக்கை 20

அத்தியாயம் 01 - நிறுவனத்தின் விவரம் / நிறைவேற்றுப் பொழிப்பு

1.1. அறிமுகம்:

நிதி, பொருளாதார உறுதிப்பாடு, மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு இலங்கையில் பிரதான அமைச்சரவை அமைச்சு ஆகும்.

அதன்மூலம் நாட்டு மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதனை உறுதிப்படுத்துவம் பொருட்டு முதலீடு மற்றும் பொருளாதார அபிவிருத்தி ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக நாட்டின் பொருளாதார மற்றும் நிதிக் கொள்கைகளை வகுத்தல், முன்மொழிதல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பன பிரதானமாக மேற்கொள்ளப்படுகின்றன.

தற்போது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி கௌரவ ரணில் விக்ரமசிங்ஹ அவர்கள் நிதி, பொருளாதார உறுதிப்பாடு, மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சராக நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற அதேவேளையில், திரு. கே.எம். மஹிந்த சிறிவர்தன அவர்கள் திறைசேரியின் செயலாளராக கடமைகளை மேற்கொள்கின்றார்.

1.2 நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள்

தூரநோக்கு

“துரித அபிவிருத்திக்கும் முதலீட்டுக்கும் வசதியளிக்கும் பொருளாதாரச் சூழலொன்றின் ஊடாக புதியதோர் இலங்கை”

பணிக்கூற்று

“மக்களுக்கு ஓர் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தினை வழங்குவதை உறுதிசெய்யும் பொருட்டு முதலீட்டையும் பொருளாதார அபிவிருத்தியையும் ஊக்குவிப்பதற்காக வினைத்திறனுடனும் வெளிப்படைத்தன்மையுடனும் நாட்டின் பொருளாதாரக் கொள்கைகளையும், அரசிறைக் கொள்கைகளையும் ஆக்குதல், முன்மொழிதல், செயற்படுத்துதல் மற்றும் மதிப்பிடுதல்”

குறிக்கோள்கள்


- நாட்டின் தேசிய பொருளாதார மற்றும் நிதிக் கொள்கைகள் என்பனவற்றினையும் மூலோபாயங்களையும் தயாரித்தல்.
- அரசிறைக் கொள்கையை தயாரித்தல் மற்றும் பேரண்ட அரசிறைக் கொள்கை முகாமைத்துவம்
- தேசிய அபிவிருத்தி திட்டத்தினைத் தயாரித்தல் மற்றும் நிதி வளங்களை முகாமை செய்தல்.
- தேசிய வரிக்கொள்கையினை முகாமை செய்தல் மற்றும் அரசாங்க வருமானத்தை வினைத்திறன்மிக்கதாகப் பயன்படுத்துதல்
- இலங்கை மத்திய வங்கியுடன் ஒன்றிணைந்து நாணயக் கொள்கைகளை உருவாக்குதல்.

- அரச மற்றும் தனியார்த்துறை செயற்பாடுகளை கூட்டிணைத்தல் மற்றும் பொருளாதார அபிவிருத்திக்காக தனியார் துறையினருக்கு வசதியளித்தல்.
- சர்வதேச முகவர்களுடன் இணைந்து செயற்படுதல் மற்றும் திரட்டப்படுகின்ற வெளிநாட்டு நிதி வளங்களின் வினைத்திறன்மிக்க பயன்பாட்டினை உறுதிப்படுத்துதல்.
- திரட்டு நிதியினை முகாமை செய்தல், அதனை கணக்கு வைத்தல் மற்றும் நாட்டின் வருடாந்த கணக்குகளை சர்வதேச தராதரங்களுக்கு அமைய வெளியிடுதல்.

1.3 பிரதான பணிகள்

- அரசிறை மற்றும் வரி கணக்கிடல் விடயத்துடன் தொடர்புபட்ட திணைக்களங்கள் நியதிச் சட்டமுறை நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றின் கீழ் வருகின்ற மேற்கூறப்பட்ட விடயங்களில் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை தயாரித்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- பேரண்ட நிதி முகாமைத்துவம் மற்றும் அரசிறைக் கொள்கைகளைத் தயாரித்தல்.
- நிதி வளங்களை முகாமை செய்தல் மற்றும் வருடாந்த வரவு செலவு திட்டத்தை தயாரித்தல்.
- வரவு செலவு பற்றிய நிதி கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்துதல் மற்றும் தேசிய வரவு செலவு திட்டத்தில் நடைமுறைப்படுத்துதல்.
- அரச வருமானத்தை வினைத்திறனுடன் பயன்படுத்துதல் மற்றும் தேசிய வரிக் கொள்கைகளை முகாமை செய்தல்.
- அரச நிதி ஒழுங்கு விதிகளை அமுல்படுத்துதல்.
- திரண்ட நிதியத்தை முகாமை செய்தல்.
- அரச செலவின முகாமைத்துவம்.
- அரசாங்கத்தின் பெறுகை ஆலோசனைச் சேவை.
- திணைக்களங்கள் மற்றும் ஏனைய அரச நிதிகளை நிர்வகித்தல்.
- அரச கணக்குகள் செயற்குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்ட திறைசேரி கூட்டங்களின் அறிக்கையை பேணிவருதல்.
- திணைக்களங்களின் முகாமைத்துவ கணக்காய்வு மேம்படுத்துவதற்காக வழிகாட்டல்களை தயாரித்தல்.
- பதவி அணி முகாமைத்துவம்
- நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட ஏனைய சகல விடயங்களுடன் தொடர்புபட்ட விடயங்கள்.
- நிறுவனங்களை மேற்பார்வை செய்தல்.

1.4 நிறுவனக் கட்டமைப்பு



1.5 அமைச்சின் கீழ் காணப்படுகின்ற திணைக்களங்கள்

01 பொதுத் திறைசேரி
02 தேசிய திட்டமிடல் திணைக்களம்
03 கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை திணைக்களம்
04 வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்
05 அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
06 தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம்
07 முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்
08 அரச நிதித் திணைக்களம்
09 திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்
10 அரச கணக்குகள் திணைக்களம்
11 வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கை திணைக்களம்
12 தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களம்
13 சட்ட அலுவல்கள் திணைக்களம்
14 முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம்
15 அபிவிருத்தி நிதித் திணைக்களம்
16 பொதுத் தொழில்முயற்சி திணைக்களம்
17 கொம்ப்ட்ரோலர் ஜெனரல் அலுவலகம்
18 உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
19 இலங்கை சுங்கம்
20 மதுவரித் திணைக்களம்
21 விலைமதிப்பீட்டு திணைக்களம்
22 இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
23 தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்
24 தொலைத்தொடர்புத் திணைக்களம்
25 உள்நாட்டு வர்த்தகத் திணைக்களம்

1.6 அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்கள்/ நிதியங்கள்

01 அரச வளங்கள் முகாமைத்துவக் கூட்டுத்தாபனம்
02 தேசிய லொத்தர் சபை
03 அபிவிருத்தி லொத்தர் சபை
04 இலங்கை மத்திய வங்கி
05 அனைத்து அரச வங்கிகள், நிதி நிறுவனங்கள், காப்புறுதி மற்றும் அவற்றின் துணைக் கம்பனிகளும் நிறுவனங்களும்
06 இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு
07 இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் அவற்றின் துணைக் கம்பனிகளும் இணை நிறுவனங்களும்
08 இலங்கை கடன் தகவல் பணியகம்
09 இலங்கை பிணையங்கள் மற்றும் செலாவணி ஆணைக்குழு
10 இலங்கை கணக்குகள் மற்றும் கணக்காய்வு தர மீளாய்வுச் சபை
11 இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு
12 இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
13 வீடமைப்பு அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபனம்
14 அரசு ஈட்டு, முதலீட்டு வங்கி
15 பிரதேச அபிவிருத்தி வங்கி
16 வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு
17 கொள்கை கற்கைகள் நிறுவனம்
18 நிலைபேறான அபிவிருத்தி சபை
19 நலன்புரி நன்மைகள் சபை
20 ஆரசாங்க சேவை பரஸ்பர சகாய சங்கம்

21 வனசீவராசி நம்பிக்கை நிதியம்
22 இலங்கை வெகுஜன ஊடக பயிற்சி நிறுவனம்
23 இறைச்சி பயிர்கள் மற்றும் தானிய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி அதிகாரசபை
24 பீப்பிள் ∴பெர்டிலைசர் எண்டர்பிரைசஸ் லிமிடெட்
25 குறைந்த செயற்பாட்டைக் கொண்ட தொழில்முயற்சிகள் அல்லது குறைந்த பயன்பாட்டைக் கொண்ட சொத்துக்களை எழுச்சிபெறச் செய்தல் (நீக்கதல்) சட்டத்தின் கீழ் திறைசேரியின் செயலாளர் வசமுள்ள நிறுவனங்கள்
26 வேலைநிறுத்தங்கள், கலவரம், சிவில் பிரச்சினை மற்றும் பயங்கரவாதம் தொடர்பான நிதியம்
27 தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியம் நிதியம்
28 ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்
29 லோகோர் சீமாட்டி நிதியம்
30 குழந்தைகளைப் பாதுகாப்போம் தேசிய நம்பிக்கை நிதியம்

1.7 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் விபரம் (இருப்பின்)

	அ) கருத்திட்டத்தின் பெயர்	ஆ) கொடைவழங்கும் முகவர்	இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு – ரூபா மில்.	கருத்திட்டக் காலம்
01	சமூகப் பாதுகாப்பு வலை கருத்திட்டம் (SSNP)	உலக வங்கி	அமெரிக்க டொலர் 75 மில்லியன்	02 வருடங்கள்
02	நிதித்துறையை நவீனமயப்படுத்துவதற்கான கருத்திட்டம் (FSMP)	உலக வங்கி சர்வதேச அபிவிருத்தி நிறுவனம் (IDA)	அமெரிக்க டொலர் 75 மில்லியன்	05 வருடங்கள்
03	e - Government Procurement	உலக வங்கி	ரூபா 152.87 மில்லியன்	05 வருடங்கள்

அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

விசேட வெற்றிகள், சவால்கள் எதிர்கால இலக்கு

2022 ஆம் ஆண்டு ஆரம்பமானதுடன் ஏற்பட்ட அந்நிய செலாவணி நெருக்கடியின் காரணமாக இலங்கை நிதி ரீதியாக சவால்மிக்க சூழ்நிலையை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அந்த இக்கட்டான பொருளாதார நிலைக்கு மத்தியில் மக்களின் வாழ்க்கையை சாதாரணமாக நடத்துவதற்கு தேவையான வசதிகளை செய்து கொடுப்பது மிகவும் சிரமமான விடயமாக இருந்த போதிலும், அந்த சவால்மிக்க சூழ்நிலைக்கு மத்தியில், ஆண்டின் இறுதிக் காலாண்டில், அந்த சிரமங்களை முடிந்தவரை குறைத்து, மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டு வரும் வகையில் பொருளாதாரத்தை செயற்படுத்தியது நாம் பெற்ற வெற்றியாகும்.

இந்த நிலையை அடைவதற்காக, பின்வரும் கொள்கைரீதியான தீர்மானங்களினூடாக சமூக பொருளாதார நிலைமையை முகாமைசெய்வதற்குத் தேவையான அடிப்படை நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட அதேவேளையில், அந்த தீர்மானங்களை சவால்மிக்க பொருளாதார சூழ்நிலையின் கீழ் பெறப்பட்ட வெற்றிகள்கள் என விவரிக்கலாம்.

- அரச சேவைக்கான புதிய ஆட்சேர்ப்பு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட அதே வேளையில், மீண்டும் ஏற்ப்படுகின்ற வெற்றிடங்களுக்கு தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களை இயன்ற அளவு இணைத்துக் கொள்ளும் கொள்கை ரீதியான தீர்மானம் எடுக்கப்பட்டது.

- அரசாங்க சேவையில் ஓய்வு பெறும் வயது 65 வயதாக நீட்டிக்கப்பட்டிருந்த அதேவேளையில், அந்த அரசின் கொள்கை மீண்டும் 60 வயது வரை குறைக்கப்பட்டது.

- அரச துறையின் செலவுச் சுமையைக் குறைத்தல் மற்றும் அரச சேவையை மறுசீரமைத்தல் ஆகிய நோக்கத்துடன், தனியார் துறையில் வேலை வாய்ப்புகளில் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் வகையில் 05 வருடங்களுக்கு சம்பளமற்ற உள்நாட்டு விடுமுறை காலத்தை வழங்குவதற்கான ஒரு சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

- அந்நிய செலாவணி உட்பாச்சளை அதிகரிப்பதற்காக, அரச மற்றும் அரைச்சார்பு அரச ஊழியர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக வழங்கப்பட்ட 05 வருட சம்பளமற்ற வெளிநாட்டு விடுமுறை காலம் தொடர்பாகக் காணப்பட்ட சட்ட ரீதியான தடைகளை தளர்த்தி அதிகமானவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும் வகையில் புதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

- அரைச்சார்பு அரசாங்க நிறுவனங்களில் ஊக்குவிப்புத்தொகை மற்றும் விடுமுறை ஊதியம் வழங்குவதை இலாபம் ஈட்டும் நிறுவனங்களுக்கு மாத்திரம் வழங்குவதற்கு தீர்மானித்தமை.

- அரசாங்க நிறுவனங்களை மறுசீரமைக்கவும் மற்றும் அரசாங்க மற்றும் தனியார் ஒருங்கிணைந்த அபிவிருத்தி நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கு நிறுவனங்களை தாபிப்பதற்கும் கொள்கைரீதியான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. அதன் கீழ், அரச தொழில்முயற்சி மறுசீரமைப்பு அலகு மற்றும் (SOE) மற்றும் தேசிய அரசாங்க தனியார் பங்குடமை தேசிய முகவர் நிறுவனம் (NAPPP) ஆகியவற்றைத் தாபித்தல்.

- அரச செலவினங்களைக் குறைப்பதற்காக, அரச நிறுவனங்களில் அனைத்து வைபவங்களையும் நிறுத்துமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்ட அதேவேளையில், அரச செலவினங்களை அதிகபட்சமாக கட்டுப்படுத்துவது தொடர்பாக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

- அத்தியாவசிய மருந்துகள், எரிபொருள் மற்றும் ஏனைய மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதற்கு ஐ.அ.டொலர் 01 பில்லியன் இந்திய கடன் உதவி நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்ட அதேவேளையில், 2022 ஆம் ஆண்டின் இறுதியில், அந்த நிதியத்திலிருந்து சுமார் 70% நிதி மேற்குறிப்பிட்ட நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டது.

- நலன்புரி நன்மைகள் சபையின் மூலம் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களை அடையாளங் காணும் நிகழ்ச்சித் திட்டத்திற்கான தகவல்களை திரட்டுவது ஆரம்பிக்கப்பட்ட அதேவேளையில், இதற்காக ஆண்டு இறுதிக்குள் கிட்டத்தட்ட 3.4 மில்லியன் குடும்பங்கள் வாழ்வாதார உதவியைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பித்துள்ளன.

- இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், குறிப்பிட்ட உதவியை பெறுவதற்குத் தகுதியானவர்கள் சம்பந்தப்பட்ட தகுதிறன்களுக்கு அமைவாக அடையாளம் காணப்படும் வரை அனைவருக்கும் ரூபா 5000.00 முதல் ரூபா 7500.00 வரை உதவித் தொகை வழங்கப்பட்டது.

- இதற்கு மேலதிகமாக, சிறுநீரக நோயாளர்களுக்கான கொடுப்பனவுகள், ஊனமுற்றோருக்கான கொடுப்பனவுகள் மற்றும் முதியோர் கொடுப்பனவுகள் தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவந்தன.

- போசாக்கு தேவையுடையவர்கள் என அடையாளம் காணப்பட்ட குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்குவது மேற்கொள்ளப்பட்ட அதேவேளையில், இதுவரை அமுல்படுத்தப்பட்டுள்ள பாடசாலை மாணவர்களுக்கு சீருடை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்து அடையாளம் காணப்பட்ட குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை பாதணிகள் வழங்கப்பட்டன.

- அந்நியச் செலாவணி நெருக்கடியை முகாமைசெய்வதற்கு இறக்குமதி கட்டுப்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அதன் மூலம் உள்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய அத்தியாவசியமற்ற ஆடம்பரப் பொருட்களை இறக்குமதிசெய்வதை தற்காலிகமாக இடைநிறுத்திய அதேவேளையில், அடையாளம் காணப்பட்ட குறிப்பிட்ட சில பொருட்களுக்கு மேலதிக வரி விதிப்பு மேற்கொள்ளப்பட்டது.

- இறக்குமதியை கட்டுப்படுத்துவதுடன் உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதும் மேற்கொள்ளப்பட்டது.

- தற்போதுள்ள அந்நியச் செலாவணி பிரச்சினையை முகாமை செய்துகொள்வதற்கு, 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட வாகனங்களின் இறக்குமதியை இடைநிறுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்தும் 2022 ஆம் ஆண்டு முழுவதும் பேணப்பட்டுவந்தன.

- அரசாங்கத்தால் வழங்கப்படும் சக்திவலு மற்றும் ஏனைய சேவைகளான மின்சாரம், எரிவாயு, எரிபொருள் மற்றும் நீர் போன்றவற்றுக்கு வழங்கப்படும் மானியங்களைக் குறைப்பதற்காக, அந்த நிறுவனங்களின் செயற்பாட்டுச் செலவுகளை ஈடுசெய்வதற்கு அளவுகோல் அடிப்படையிலான விலைச் சூத்திரங்கள் அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஏனைய வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் மற்றும் நாடுகள் மூலம் வழங்கப்பட்டிருந்த நிதி வசதிகளின் அடிப்படையில்

செயல்படுத்தப்பட்டுவரும் கருத்திட்டங்களின் நோக்கங்கள் மறுபரிசீலனை செய்யப்பட்ட அதேவேளையில், கடன் தொகையைப் பயன்படுத்துவது குறித்து பிரயோக ரீதியில் செலவு முன்னுரிமைகள் உள்ள துறைகளுக்கு மீண்டும் ஒதுக்குவதற்கான கலந்துரையாடல்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- திறைசேரி பிணைமுறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டி விகிதம் உயர்த்தப்பட்டது. இதன் மூலம் அரசாங்க மற்றும் தனியார் வங்கிகளில் பண வைப்பு செய்பவர்களுக்கு அதிக வட்டி விகிதங்களை வழங்குவதற்கு வசதிகள் செய்யப்பட்ட அதேவேளையில் அதன் மூலம் வைப்புத்தொகை அதிகரிக்க ஊக்கமளிக்கப்பட்டது.

- நகர்ப்புற மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்ட குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறுபவர்களுக்கான வீடுகளை வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்களும் 2022 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டன.

- பெருந்தோட்டத் தொழிலுக்குத் தேவையான கிளைபோசேட் மீதான தடையை நீக்கி மீண்டும் பயன்படுத்துவதற்கு அனுமதித்ததன் மூலம் பெருந்தோட்டக் கைத்தொழில் ஊக்குவிக்கப்பட்டது.

- கரிம உரங்களின் பயன்பாட்டை ஊக்குவிக்கும் அரசின் கொள்கை திருத்தப்பட்டு உர மானியங்களை மீண்டும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- உள்நாட்டு விவசாயியையும் சந்தை விலையையும் சமநிலையில் வைத்திருக்க அவ்வப்போது வரித் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

எதிர்கால இலக்குகள்

மேலே காட்டப்பட்டுள்ள கொள்கைத் தீர்மானங்களின் அடிப்படையில் 2023 ஆம் ஆண்டில் தேவையான உபாயத் திட்டங்களை 2023 ஆம் ஆண்டில் மேலும் நடைமுறைப்படுத்துவதன் மூலம் நிலையான பொருளாதார நிலையை நோக்கி இலங்கையை இட்டுச் செல்வதே பிரதான இலக்காகும்.

அதன் பிரகாரம், அரசாங்க சேவையை மறுசீரமைத்தல், பணியாளர்களின் எண்ணிக்கையை அங்கீகரிக்கப்பட்ட தகுதிறன்களின் அடிப்படையில் முகாமைசெய்தல், நலன்புரி நிகழ்ச்சி திட்டங்களின் மூலம் தெரிவுசெய்யப்படும் நபர்களுக்கு 2022 முதல் செயல்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துதல் மற்றும் ஏனைய பொருளாதார உபாயத் திட்டங்களினூடாக பொருளாதார சுதந்திரத்தை அடைவதனை இலக்காகக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

செயலாளர், (பதில் கடமை)
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
2023.05.26

Deputy Secretary to the Treasury
Ministry of Finance
General Treasury
Colombo - 01.

A. K. Seneviratne
Deputy Secretary to the Treasury
Ministry of Finance
General Treasury
Colombo - 01.

அத்தியாயம் 03 2022 டிசம்பர் 31 முடிவுற்ற வருடத்துக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

3.1 நிதிச் செயலாற்றகைப் பற்றிய கூற்று

ஏசீஏ- எப்

2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

பாதீட்டு 2022		குறிப்பு	உண்மை நிலை 2022	2021	
-	வருமானப் பெறுகைகள்		-	-	
-	வருமான வரி	1	-	-	ஏசீஏ-1
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	-	-	
-	மொத்த வருமானப் பெறுகைகள் (அ)		-	-	
-	வருமானமற்ற பெறுகைகள்		-	-	
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		1,814,034,102	2,416,228,000	ஏசீஏ-3
-	வைப்புகள்		561,733,405	543,340,273	ஏசீஏ-4
-	முற்பணக் கணக்குகள்		28,342,232	41,189,329	ஏசீஏ-5
-	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		19,515,207	23,394,346	
-	மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)		**2,423,624,946**	3,024,151,948	
-	மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)		**2,423,624,946**	**3,024,151,948**	
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)		161	161,567,577	
	தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)		2,423,624,786	2,862,584,372	
	கழி : செலவினம்				
-	மீண்டுவரும் செலவினம்		-	-	
565,250,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	495,689,568	279,281,465	
739,551,000	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	704,327,251	580,795,621	ஏசீஏ-2(ii)
610,120,000	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	418,073,383	894,669,163	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
1,000,000	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	455,956	391,665	
1,915,921,000	மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)		**1,618,546,158**	**1,755,137,913**	
	மூலதனம் செலவினம்				
38,220,000	முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	10	7,010,051	127,221,474	
293,000,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	62,301,300	105,647,344	
230,000,000	மூலதன மாற்றல்கள்	12	50,978,000	83,624,126	ஏசீஏ-2(ii)
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	
33,975,000	திறன் விருத்தி	14	4,139,585	9,245,748	
1,427,800,000	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	1,119,702,558	1,202,865,023	
2,022,995,000	மொத்த மூலதனம் செலவினம் (எ)		**1,244,131,494**	**1,528,603,715**	
	வைப்புக் கொடுப்பனவுகள்		533,842,802	439,492,016	ஏசீஏ-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		27,098,215	29,645,982	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்		-	-	
	மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		560,941,017	469,137,998	
	மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)		3,423,618,669	3,752,879,627	
	டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)		(999,993,883)	(890,295,255)	
	பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி		(999,993,883)	(890,295,255)	ஏசீஏ-7
-	டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி				ஏசீஏ-3
			(999,993,883)	(890,295,255)	

3.2 நிதிச் செயலாற்றகைப் பற்றிய கூற்று

ஏசீஏ -பீ

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2022 ரூபா	2021 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	14,383,952,957	14,404,783,731
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	85,694,633	137,881,173
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	-
மொத்த சொத்துக்கள்		**14,469,647,590**	**14,542,664,905**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		(177,747,571)	(148,612,950)
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		14,383,952,957	14,404,783,731
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ	17,935,426	68,877,949
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	245,506,778	217,616,174
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		**14,469,647,590**	**14,542,664,905**

பக்க இலக்கம் ..... முதல் ..... வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் ..... முதல் ..... வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

.....	.....	.....
பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்	கணக்கீட்டு உத்தியோகத்தர்	பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர்
பெயர்: 28/12/23	பெயர்:	பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பதவி : K.M.M. Siriwardana Secretary to the Treasury and Secretary to the Ministry of Finance, Economic Stabilization and National Policies The Secretariat Colombo 01.	பதவி : H.G. Sumanasinghe Additional Secretary Ministry of Finance, Economic Stabilization and National Policies	பெயர் : A.A.T.K. Adikari Chief Finance Officer Ministry of Finance, Economic Stabilization and National Policies
திகதி :	திகதி : 28/12/23	திகதி :

2

3.3 காசுப் பாய்ச்சல் கூற்று

ஏசீஏ- சீ

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் கூற்று

உண்மை

	2022 ரூபா	2021 ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	19,515,207	23,394,346
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	-	-
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	1,814,034,102	2,416,228,000
முற்பணங்களை அறவிடல்	26,873,726	33,860,852
வைப்புக்களின் பெறுகை	559,514,927	543,336,048
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**2,419,937,962**	**3,016,819,246**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள்	964,402,030	860,358,860
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	36,651,151	736,115,012
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	45,190,074	104,907,372
நிறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	161	161,567,577
முற்பணக் கொடுப்பனவு	25,868,728	32,781,115
வைப்புக் கொடுப்பனவு	533,842,802	439,492,016
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**1,605,954,946**	**2,335,221,952**
தொழிற்பாடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**813,983,016**	**681,597,294**
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பொளதீக சொத்துக்களின் விற்பனை	-	-
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	-	-
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	813,983,016	681,597,294
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	**813,983,016**	**681,597,294**
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	**(813,983,016)**	**(681,597,294)**
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	-	-
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)	-	-
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)	-	-
ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	-	-

3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

அறிக்கையிடும் அடிப்படை

1) அறிக்கையிடும் காலப் பகுதி

2022 சனவரி 01 இருந்து டிசெம்பர் 31 வரையான காலப் பகுதி இந்நிதிக் கூற்றுக்களின் அறிக்கையிடும் காலப் பகுதியாகும்.

2) அளவீட்டின் அடிப்படை

நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுக் கிரயத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில் ஒருசில சொத்துக்களில் வரலாற்றுக் கிரயம் மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதங்களில் காட்டப்படாத போது கணக்குகளை தயாரிப்பது மேம்படுத்தப்பட்ட நிதியை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது

நிதிக்கூற்றுக்கள் இலங்கை ரூபாகளில் கிட்டிய ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

3) வருமானங்களை அடையாளம் காணுதல்

பரிமாற்று மற்றும் பரிமாற்றம் அல்லாத வருமானங்கள் அவற்றின் வரியின் கால எல்லையை கருத்திற் கொள்ளாது, கணக்கு கால எல்லைக்குள் காசு கிடைப்பனவுக்கு அமைவாக அடையாளம் காணப்படுகின்றது.

4) சொத்துக்கள் பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களை அடையாளம் காணுதலும் அளவிடுதலும்

சொத்துக்கள் தொடர்பில் எதிர்கால பொருளாதார நன்மை நிறுவனத்திற்கு கிடைக்கின்றது என்பதை உறுதிப்படுத்தியுள்ள சந்தர்ப்பத்திலும் அந்த சொத்துக்களை நம்பிக்கையான முறையில் அளவிடக் கூடியதாக இருப்பின், அந்த ஆதனங்கள் சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் என அடையாளம் காணப்படுகின்றது.

சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் செலவுக்கு அடையாளம் காணப்படுகின்ற அதே வேளையில் செலவு மாதிரி ஏற்புடையதாக சந்தர்ப்பத்தில் மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி பயன்படுத்தப்படுகின்றது.

5) சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்

இந்த ஒதுக்கக் கணக்கு சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் தொடர்பான கணக்கு ஆகும்.

6) காசு மற்றும் காசுக்கு சமமானவை

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறு உள்நாட்டில் புழக்கத்திலுள்ள நாணயத்தாள் மற்றும் காசு ஆகியவற்றில் காசு மற்றும் காசுக்கு சமமானவை என்பவற்றை உள்ளடக்கி இருக்கும்.

3.5 வருமானத்தை திரட்டுவதன் செயலாற்றுகை

வருமானக் குறியீடு	வருமானக் குறியீட்டின் விபரம்	வருமான மதிப்பீடு		திரட்டப்பட்ட வருமானம்	
		ஆரம்ப மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	தொகை (ரூபா)	இறுதி வருமான மதிப்பீட்டின் சதவீதமாக %
	ஏற்புடையதல்ல				

3.6 ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளை பயன்படுத்துவதன் செயலாற்றுகை

ஏற்பாடுகளின் வகை	ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள்		உண்மை செலவினம் (ரூபா)	பயன்படுத்தப்பட்ட ஏற்பாடுகள் முடிவுறுத்தப்பட்ட இறுதி ஏற்பாட்டின் சதவீதமாக %
	ஆரம்ப ஏற்பாடு (ரூபா)	இறுதி ஏற்பாடு (ரூபா)		
மீண்டுவரும்	1,915,921,000.00	2,019,177,516.60	1,618,546,158.18	80%
மூலதனம்	2,022,995,000.00	2,046,053,483.40	1,244,131,494.14	61%

3.7 நி.ஒ. 208 இன் பிரகாரம் ஏனைய அமைச்சர்களின் / திணைக்களங்களின் பிரதிநிதி என்ற வகையில் இந்த திணைக்களத்திற்கு/ மாவட்ட செயலகத்திற்கு/ மாகாண சபைக்கு வழங்கப்பட்ட ஏற்பாடுகள்

தொடர் இலக்கம்	ஏற்பாடுகளை பெற்ற அமைச்சுக்கள்/ திணைக்களங்கள்	ஏற்பாட்டின் நோக்கம்	ஏற்பாடு		உண்மை செலவினம்	பயன்படுத்தப்பட்ட ஏற்பாடுகள் முடிவுறுத்தப்பட்ட இறுதி ஏற்பாட்டின் சதவீதமாக %
			ஆரம்ப ஏற்பாடு	இறுதி ஏற்பாடு		
01	வன ஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சு	சினோ லங்கா கட்டடத்தின் வாடகையின் ஒரு பகுதியைச் செலுத்துவதற்கு	40,000,000.00	40,000,000.00	39,254,915.33	98.14%

02	வன ஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சு	சினோ லங்கா கட்டடத்தின் மின்சாரம் மற்றும் நீர்	6,000,000.00	6,000,000.00	4,425,609.17	73.76%
03	பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு	அபிவிருத்தி உத்தியோகத்தர் களின் சம்பளம்	598,310.00	598,310.00	598,310.00	100.00%
04	பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு	அபிவிருத்தி உத்தியோகத்தர் களின் கொடுப்பனவு	290,700.00	290,700.00	290,700.00	100.00%
05	ஓய்வூதியத் திணைக்களம்	மரண பணிக்கொடையைச் செலுத்துவதற்கு	231,596.50	231,596.50	20,500.00	8.85%

3.8 நிதி அல்லாத சொத்துக்களை அறிக்கையிடுவதன் செயலாற்றுகை

வருமான குறியீடு	குறியீட்டின் விபரம்	2022.12.31ஆம் திகதியில் உள்ளவாறு திறைசேரி ஆய்வு அறிக்கைக்கு அமைவாக நிலுவை	2022.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு நிதி நிலைமை அறிக்கைக்கு அமைவாக நிலுவை	முன்வரும் காலங்களில் கணக்கீடு செய்யப்பட உள்ளவை	முன்னேற்றத்தை சதவீதமாக அறிக்கையிடல் %
9151	கட்டிடம் மற்றும் கட்டமைப்பு	-	3,756,429,071.16	-	
9152	இயந்திரசாதனம்	-	2,190,716,289.02	-	100%
9153	காணி	-	8,389,900,000.00	-	
9154	அருவமான சொத்துக்கள்	-	47,669,714.08	-	
9155	உயிரியல் சொத்துக்கள்	-	-	-	
9160	நடைபெறும் பணிகள்	-	-	-	
9180	குத்தகை சொத்துக்கள்	-	-	-	

3.9 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

பின்னிணைப்பு 01 ஆக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அத்தியாயம் 04 – செயலாற்றுகைச் சுட்டிகள்

நிறுவனத்தின் செயலாற்றகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)

குறிப்பீட்டு சுட்டிகள்	எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு		
	100%- 90%	75%-89%	50%- 74%
திட்டமிடப்பட்ட உள்நாட்டு பயிற்சி வாய்ப்புகளின் எண்ணிக்கை	√		
கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புகளின் எண்ணிக்கை	√		
கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு லீவு விண்ணப்பங்களின் எண்ணிக்கை	√		
அரசாங்க சேவை மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு அனுப்பப்பட்ட வெளிநாட்டு லீவு விண்ணப்பங்களின் எண்ணிக்கை	√		
நியமிக்கப்பட்ட திறைசேரி பிரதிநிதிகளின் எண்ணிக்கை	√		
சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்களின் எண்ணிக்கை	√		

அத்தியாயம் 05 – நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை

5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்

நிலைபேறான அபிவிருத்தியின்போது நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சுக்கு உரிய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை தனித்தனியாக அடையாளம் காண முடியாது. அதன் பிரகாரம், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு மற்றும் திறைசேரிக்குச் சொந்தமான பல்வேறு திணைக்களங்கள் மூலம் தேசிய அளவில் நிலைபேறான பொருளாதார முகாமைத்துவத்தின் பொருட்டு விசேட திணைக்களங்கள் தாபிக்கப்பட்டுள்ள அதேவேளையில், அதன் மூலம் பொருளாதார வளங்களுக்கு அனைவரினதும் அணுகல் உரிமையையும் உறுதிசெய்கின்ற முன்னுரிமைக்கு உட்பட்டு அந்தந்த பிரிவுகளுக்கு உரிய பொருளாதார அபிவிருத்திக் கொள்கைகளைத் தயாரித்தல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் மேற்பார்வைசெய்தல் என்பன மேற்கொள்ளப்படுகின்றன. இந்த செயல்முறை நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு தேவையான நடவடிக்கைகளையும் உள்ளடக்கியுள்ளது.

இங்கு நிதிக் கொள்கைகள் மற்றும் ஏற்பாடுகளை ஒதுக்கீடு செய்தல், அபிவிருத்திக் கொள்கை திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் 17 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்படுகின்றன. அதேபோன்று, ஒவ்வொரு அமைச்சினாலும் நிறுவனங்களினாலும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நடவடிக்கைத் திட்டங்களை தயாரிப்பதில் அந்த நிறுவனங்களுக்கு பொருந்தக்கூடிய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை மாற்றியமைப்பதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள், வழிகாட்டுதல் மற்றும் ஏற்பாடுகள் நிதி அமைச்சின் மூலம் வழங்கப்படுகிறது.

5.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கான வெற்றி மற்றும் சவால்கள்

2022 ஆம் ஆண்டு ஏற்பட்ட நிதிச் சிக்கல்கள் காரணமாக, அரசாங்கத்தின் அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் சமூக நலன்புரிச் செயல்பாடுகள் தொடர்பான அனைத்து நிகழ்ச்சித் திட்டங்கள் குறித்தும் மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன் மூலம் அத்தியாவசிய நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் தொடர்பான முன்னுரிமைகள் அடையாளம் காணப்பட்டுள்ள அதேவேளையில் அரசாங்கத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்கான செலவு முகாமைத்துவக் கொள்கைக்கு முன்னுரிமையளித்து மூலோபாய அபிவிருத்தி நடவடிக்கைகளைப் பேணி வருவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

நிலவிய நடைமுறை ரீதியான கடினமான பொருளாதார சூழ்நிலையில், சமூக சமத்துவத்தை உறுதிசெய்வதற்கும் வறுமையை குறைப்பதற்கும், மக்களின் சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து நிலைமைகளை முறையாகப் பேணிவருவதன் மூலம் நல்ல வாழ்க்கைத் தரத்தை வழங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ச்சியாக பேணிவருவதற்கும் தேவையான நிதியுதவியை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம், சமூர்த்தி மானியம் மற்றும் வாழ்வாதாரத்தை எதிர்பார்க்கும் குடும்பங்களுக்கு (காத்திருப்போர் பட்டியல்) மாதாந்த உதவி வழங்குதல், ஊனமுற்றோர் மற்றும் முதியோர் உதவித்தொகையை வழங்குதல், ஊட்டச்சத்து தேவைகளுக்காக அடையாளம் காணப்பட்ட பாடசாலைகளில் உள்ள சிறுவர்களுக்கு மதிய உணவு வழங்குதல் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான உதவி ஆகியவை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளான 01, 02, 03 மற்றும் 04 ஆகியவற்றுக்கு முன்னுரிமை வழங்குவது அரசாங்கத்தின் முக்கியமான பொறுப்பாகக் கருதி, இலவசக் கல்வி மற்றும் சுகாதார சேவைகளை முடிந்தவரை தரமாகப் பேணுவதற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் வழங்கி தேவையான அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும், அத்தியாவசிய சேவைகளை முடிந்தவரை சுகாதாரத் துறைகளுக்கு வழங்குவதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டுக் கடன்களை நம்பியிருப்பதை நிறுத்த வேண்டிய நிலை இருந்தபோதிலும், உள்நாட்டில் நிலவிய நிதி நெருக்கடியை எதிர்கொண்டு, புதிய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மூலம் உட்கட்டமைப்பை மேலும் மேம்படுத்தவும், அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகளைப் பேணிவருவதற்கும் பராமரிப்பு நடவடிக்கைகள் பற்றியும் அரசாங்கம் தலையிட்டுள்ள அதேவேளையில், மக்களின் வாழ்வாதாரத்தை பேணுவதற்கு ஏற்ப,முக்கிய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளில் கடுமையாக கவனத்தை செலுத்தி உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் ஆதரவிலும் மேற்பார்வையிலும் கீழ் சிறந்த வாழ்க்கை நிலைமையை மக்களுக்கு வழங்குவதற்கும் பொருளாதார சிரமங்களைக் குறைக்கக்கூடிய விதத்திலும் அந்த நிகழ்ச்சித்திட்டங்கள் செயல்படுத்தப்பட்ட அதேவேளையில், அதற்காக தேசிய வரவுசெலவு திட்டத் திணைக்களம், தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் ஆகியவை இதில் தீவிரமாக பங்களிப்புச் செய்துள்ளன.

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கு தேவையான உதவிகளையும் விவசாயத் தொழில் தொடர்பான உதவிகளை வழங்குவதற்கும் ஏனைய நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் அவர்களை பாதுகாப்பது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில், இது தொடர்பாக, அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் மூலம் அரச மற்றும் ஏனைய வணிக வங்கிகளுடன் இணைந்துபல்வேறு கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி சமூக பொருளாதார நிலைமை பேணிவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

